**மதுகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர கணக்காய்வுக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதுகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனச் செலவினங்களிற்கு வருமானத்தினால் பங்களிப்புக் கணக்கு மீதி ரூபா 226,536,910 தொகையானதுடன் நிலையான சொத்துக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 225,813,107 ஆனமையால் அக் கணக்குகளிற்கு இடையே ரூபா 723,803 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் செலவினங்கள் கடன்கொடுத்தோர் பதிவேட்டின் மீதி ரூபா 1,009,030 தொகை கூடுதலாக சமப்படுத்தப்பட்டுக் காண்பிக்கப்பட்ட தவறைச் சீராக்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 100,030 தொகை மாத்திரம் கடன்கொடுத்தோர் கணக்கிலும் தொங்கல் கணக்கிலும் சீராக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கைத்தொழிலிற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த மூலதன உதவித் தொகையான ரூபா 2,768,680 தொகையான வைப்புக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக வருமானச் செலவினக் கணக்கில் மூலதன வருமான பட்டியலிடல் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் போது காசேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த கைத்தொழில் கொடுப்பனவுகளைப் பார்க்கிலும் கூடுதலாக ரூபா 4,439,581 தொகை மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையைச்

சீராக்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 957,341 தொகையால் மாத்திரம் கணக்குச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) முன்னைய ஆண்டின் எனது அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் 06 குறைபாடுகள் மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நீண்ட காலமாக முன்கொண்டு வரப்படும் ரூபா 454,225 கூட்டுத்தொகையான 02 கணக்கு மீதிகள் அறவிடப்படுவதற்கும், ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,920,036 தொகையான மீதியைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடுகள், பட்டோலைகள் மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் இன்மையால் ரூபா 242,033,949 கூட்டுத்தொகையான 07 கணக்கு மீதிகள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,549,979 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,260,916 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 6,494 | 4,042 | 8,165 |
| (ii) | வாடகை | 5,492 | 4,729 | 1,125 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 179 | 174 | 67 |
| (iv) | ஏனைய வருமானம் | 350 | 350 | - |

**2.2.2 வீதவரி**

----------

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையான வீதவரி மீதி ரூபா 7,395,187 தொகையும், மீளாய்வாண்டில் பட்டியல் இடப்பட்ட ரூபா 4,414,236 தொகையுமாகக் காணப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்ப நிலுவையில் ரூபா 1,751,873 தொகை அதாவது 24 சதவீதமும், பட்டியல் இடப்பட்டவைகளில் ரூபா 2,172,250 தொகையுமான அதாவது 49 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு சபையின் தலைமைக் காரியாலய அதிகாரப்பகுதியில் ரூபா 5,000 வைப் பார்க்கிலும் நிலுவையான மீதியுடன் 273 வீதவரி செலுத்துனர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 2,543,888 ஆகக் காணப்பட்டது.

**2.2.3 ஏக்கர் வரி**

------------------

மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூபா 147,645 தொகையான நிலுவையான ஏக்கர் வரி மீதியில் 2015 யூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 83,327 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2:2:4 கைத்தொழில் மற்றும் வியாபார வரி**

---------------------------------------------------

மீளாய்வாண்டின் ஒக்டோபர் 31 ஆம் திகதி நிலவிய ரூபா 407,934 தொகையான கைத்தொழில் மற்றும் வியாபார வரி நிலுவை மீதியில் ரூபா 350,794 தொகையான தலைமைக் காரியாலய அதிகாரப் பிரதேசத்தில் 132 நிறுவகங்களில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.5 வியாபார நிலைய வாடகை**

-----------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,006,220 தொகையான வியாபார நிலைய வாடகை மீதியில் 2015 மே 30 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 474,579 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம்**

-----------------------------------------

மாகாண சபைச் செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணத் தொகையான ரூபா 16,500,000 தொகை பெறவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**3.1 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

---------------------------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச அதிகாரச்சட்டத்தின் 132 (ஏ) ஆம் பிரிவின் படி, ஏதேனும் சமய, புண்ணி, கலாச்சார, சுகாதார, வினோத அல்லது கல்விச் செயற்பாடு தொடர்பாக ஆண்டிற்கு ரூபா 1,000 வைப் பார்க்கிலும் கூடுதலாகச் செலவிடப்பட்டிருப்பின் இதற்காக அமைச்சரின் முழு அங்கீகாரமும் பெறப்பட வேண்டிய போதிலும் இவ்வாறு அங்கீகாரம்

பெறப்படாது 2014 ஆம் ஆண்டின் கலாச்சார விழாவிற்காக ரூபா 124,559 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதி நிர்வாக) விதி இல. 177 இன் பிரகாரம் செலவினம் ரூபா 5,000 தொகை அல்லது இதற்கு மேற்படும் ஏதேனும் வேலை, சேவை, செயற்படுத்தப்படுவதற்காக விலை மனுக்கள் கோரப்பட்ட வேண்டிய போதிலும், இவ்வாறு விலை மனுக்கள் கோரப்படாது ரூபா 128,075 தொகையான வாகனப் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

(அ) 2010 மார்ச் 04 ஆம் திகதிய ரூபா 87,765 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட கைவிரல் அடையாள இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிராததுடன் 2012 ஒக்டோபர் மாதம் இயந்திரத்திற்கு மின்னல் தாக்குதல் ஏற்பட்டமையால் செயற்பாடற்ற நிலைக்கு உட்பட்டதன் காரணமாக 2012 ஒக்டோபர் 23 ஆம் திகதி இயந்திரம் பழுதுபார்த்தலுக்காக விநியோக நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமாகிய 2014 நவம்பர் 20 ஆம் திகதி வரையிலும் மீளப் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வுத் தினமாகிய 2014 நவம்பர் 20 ஆம் திகதி வரையில் சபையில் காணப்பட்ட 02 பக்கோ இயந்திரங்களுக்கும் 02 டிபர் இயந்திரங்களுக்கும் 27,100 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 3,256,410 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், அவ் வாகனத்தை சேவையில் ஈடுபடுத்துகையில் பதிவேடு ஒன்றோ அல்லது அவற்றின் செயற்பாடு குறித்து எதிர்காலச் செயற்பாட்டுத் திட்டமோ இருக்கவில்லை.

(இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 203 ஆம் பந்தியின் படி, சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வும், 217 இன் படி, சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வும், இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம், வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையின் தலைமைக் காரியாலயத்தின் 2011 ஆம் ஆண்டின் பின்னர் மேற்குறித்த மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 174 ஆனதுடன் நிரந்தர பதவியணி 154 ஆகக் காணப்பட்டது. அமைய, செயற்திட்ட மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்கள் 53 ஆகக் காணப்பட்டதுடன் இவர்களுக்கான சம்பளம் மற்றும் படிப்பணமாக மீளாய்வாண்டின் ஒக்டோபர் வரை ரூபா 6,745,644 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளில் 20 ஊழியர்கள் பற்றாக்குறை காணப்பட்டது.

(iii) அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 03 சாரதிகள் சேர்க்கப்பட்டு சாரதி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் நிரந்தர சாரதி கணக்காய்வுத் தினத்தில் சபையின் மின்சாரப் பிரிவில் ஒளிரூட்டும் மற்றும் அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

**3.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

சபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த பின்வரும் சொத்துக்கள் பல வருட காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது காணப்பட்டது.

- மாகாணம் குறிப்பிடப்பட்ட மானியத்தின் கீழ் 2013 பெப்ரவரி 01 ஆம் திகதி ரூபா 300,675 பெறுமதிக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த புல் வெட்டும் இயந்திரம்.

- 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 139,000 பெறுமதிக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 08 புல் வெட்டும் இயந்திரங்கள்.

- 2010 ஆம் ஆண்டில் சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த 5 நூல் பந்துகள் 66 கம்பிகள்

- 2013 ஆகஸ்ட் 18 ஆம் திகதி வாகனம் கழுவுவதற்காக ரூபா 33,416 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த அதிஅழுத்தல் இயந்திரம்.

- வெல்டிங் டிரான்ஸ்போர்மர் இயந்திரம்.

- 2012 சனவரி 13 ஆம் திகதி அலகொன்று ரூபா 700 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கைபிடியற்ற 55 பிளாஸ்டிக் கதிரைகள்

- 2011 ஏப்ரல் 20 ஆம் திகதி இடர் முகாமைத்துவ அதிகாரசபையிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த 1,000 லீற்றர் நீர் தாங்கி ஒன்று.

**3.5 விளைவற்ற கணக்குகள்**

சபையால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் பேணப்படும் சேமிப்புக் கணக்கில் பல வருட காலமாக நிலவி வரும் ரூபா 260,421 தொகையான மீதி விளைவற்றுக் காணப்பட்டது.

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

(அ) வாசகர்களால் கொண்டு செல்லப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்டிராத ரூபா 37,467 தொகையான 181 புத்தகங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2015 மே மாதம் வரையிலும் மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திவிநெகும திணைக்களத்தில் இருந்து 2014 நவம்பர் மாதத்தில் சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த 488 ஜீ 1 குழாய்களில் கணக்காய்வுத் தினமாகிய

2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் 247 ஜீ 1 குழாய்கள் மாத்திரமே சபையில் காணப்பட்டன. இவ்வாறு கிடைக்கப்பெற்றிருந்த ஜீ 1 குழாய்களின் விநியோகம் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றிராததுடன் இது தொடர்பாக இருப்புப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) செலவினக் கட்டுப்பாடு
(ஈ) சொத்து முகாமைத்துவம்